# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2386/09 - 2024 මැයි මස 29 වැනි බදාදා - 2024.05.29

*2386/09 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்**

*2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிய 2369/ 42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் இறுதியாக திருத்தப்பட்டவாறான 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் ஒழுங்குவிதியை அதன் இரண்டாவது அட்டவணையிலுள்ள (3) விடயத்திற்கு உடனடுத்துப் பின்னர் விடயம் (4) என இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன் :-*

“

| | *அளவுகோல்கள்* | *சீட்டாட்ட உரிமைக் கட்டணம்* | *சீட்டாட்ட உரிமத்தினை புதுப்பிப்பதற்கான கட்டணம்* |
|---|---|---|---|
| 4 | 2022, ஒகத்து 31 ஆந் திகதிய 2295/ 10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் அனுமதிப்பத்திர ஒழுங்குவிதியில் விதிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு செயல்முறையைப் பூர்த்திசெய்து 2023, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற மற்றும் 2024, சனவரி 12 ஆந் திகதிக்கு முன்னர் முடிவடைகின்ற காலப்பகுதிக்குள் அந்த ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் | ரூபா ஐந்நூறு மில்லியன் - ஐந்து வருடங்களுக்கு மாத்திரம் | ரூபா பத்து பில்லியன் |

”

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
*2024, மே 29.*

EOG *06-0048*


1A - PG 6748 — 404 (2024/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*